## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 313/2006

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **16.02.2026** |
| **பெயர்** | **மல்லிகா** |
| **க/பெ** | **முரளி** |
| **சாட்சி** | **DW4** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.57. எ.எம்.**

**குறுக்கு விசாரணை–**

1. நான் காஞ்சிபுரத்தில் உள்ள பெருங்குடியில் உள்ளதாக என் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அங்கே எத்தனை வருடங்களாக இருந்தேன் என்றால் 1989 ல் திருமணம் ஆன பிறகு 3 வருடங்கள் அங்கு இருந்தேன். பின்னர் அனுப்பம்பட்டில் உள்ள என் தாயார் வீட்டிற்கு வந்துவிட்டேன். என் சாட்சியத்தில் தற்போது பெருங்குடியின் விலாசத்தில் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் என் கணவர் இறந்த பிறகு என் மாமியாரை பார்த்துக் கொள்ள யாரும் இல்லாத காரணத்தினால் தற்போது அங்கு தான் உள்ளேன்.

2. பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 4–ல் உள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். 2ம் வாதி எங்கு வேலை செய்தார் என்றால் சென்னையில் தான் வேலை செய்தார். சென்னையில் தான் இருந்தார். 2–ம் வாதிக்கு எங்கு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. அவர்களின் திருமணம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

நாராயணன் சென்னையில் அவரின் குடும்பத்தோடு வசித்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு நேரடியான சங்கதிகள் எதுவும் தெரியாமல் வாதிகளின் குடும்பத்தை கெடுக்கும் எண்ணத்தோடு என் பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 4–ல் கடைசி 3 வரிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. என் தாத்தாவின் பெயர் நாராயணன். வா.சா.ஆ 2 வில் பக்கம் 3–ல் உள்ள நிறைவேற்றாளர் என்று இராதாகிருஷ்ணர் என்பவர் உள்ளார் அவர் யார் என்றால் என் தந்தை. இரத்தினவள்ளி என்பவர் யார் என்றால் என் தாயார். வா.சா.ஆ 2–ல் உள்ள கையொப்பம் என் தாயார் மற்றும் என் தந்தையுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் 3ம் பிரதிவாதிக்கு என் தாயாரும், என் தந்தையாரும் சொத்தினை விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2ல் என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண் 48/1, சர்வே எண் 47/3. வா.சா.ஆ 2ல் உள்ள சொத்தினை தான் விற்பனை செய்தார்கள் என்றால் சரியல்ல.

4. என் தந்தையின் பிரதிவாதிகள் தரப்பில் முதலாம் சாட்சியாக விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். என் தந்தை அதில் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது என் தந்தை புத்திஸ்வாதீனம் இல்லாமல் இருந்தாரா என்றால் அப்போது இல்லை இப்போது தான் புத்திஸ்வாதீனம் இல்லாமல் இருக்கிறார். என் தந்தை பொய் பேசுகிறவர் அல்ல. என் தந்தை முந்தைய சாட்சியத்தில் வா.சா.ஆ 2 ஆவணத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. சாந்தகுமாரி வழக்கு சொத்தினை அவரின் மாமியாரிடம் இருந்து வாங்கினாரா என்றால் வாங்கினார்.

5. 15.04.1987ல் குத்தகை முச்சிலிக்கா எழுதியதாக என் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் அதனை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தெரியாது. 1 ஏக்கருக்கு எத்தனை மூட்டைகள் என்ற கணக்கு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தந்தைக்கு தான் தெரியும். 1989–ல் எனக்கு திருமணம் ஆனது. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1989–ல் எனக்கு திருமணம் நடந்தபிறகு நான் என் மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என் பிரமாணவாக்குமூலத்தில் 8ம் பத்தியில் 27.01.1993–ல் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது. மேற்சொன்ன ஒப்பந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. என் தந்தை கூறிதான் தெரியும். எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று என் தந்தை வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு என் தந்தை இந்நீதிமன்றத்தில் எதிரிடை பரிகாரம் கோரி இடைக்கால மனு எண் 6/2022 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் வாதிகள் பதிலுரை தாக்கல் செய்தார்கள். அந்த இடைக்கால மனுவில் ரூ. 15,91,920 நீதிமன்ற கட்டணமாக செலுத்த வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான்.

7. அதனால் நான் இத்தனை வருடங்கள் வழக்கு சொத்தில் பயிர் செய்து வருவதாக முன்னுக்குபின் முரணமாக பதில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எந்த காலத்திலும் நான் அனுபவிக்கவில்லை என்றும், வழக்கு சொத்தின் மீது எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை மற்றும் தாயார் அவர்களுக்கு உரிமை இல்லாத சொத்தினை 3–ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ 2 மூலம் கிரையம் செய்து கொடுத்தனர் என்றால் சரியல்ல. 3–ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும.

8. 3ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கு நடக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ 2 செல்லாது என்றும் , வாதிகளுக்கு தான் வழக்கு சொத்திற்கு உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவித்தில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா எங்கள் பெயரில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாமல் வழக்கு சொத்தை அபகரிக்கும் எண்ணத்தோடு வா.சா.ஆ 2 ஆவணம் இயற்றப்பட்டது என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ–2 ஆவணத்தை என் தந்தை அவரின் கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் கோரிய எதிரிடை அனுபவத்திற்கான உரிமையும் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வாதிகளை அலக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவராக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.27.p.m.**